

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.67,50,000 (அறுபத்து ஏழு இலட்சத்து ஐம்பது ரூபாய்) மதிப்பீட்டில், நீலாங்கரை சென்னை நடுநிலைப் பள்ளியில் கட்டப்பட்டுள்ள 4 வகுப்பறைகள் கொண்ட கூடுதல் வகுப்பறைக் கட்டிடத்தினை, அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார். இந்நிகழ்வில், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ், பகுதிச் செயலாளர்கள் மண்டலக் குழுத் தலைவர்கள் வி.இ. மதியழகன், எஸ்.பி. ரவிச்சந்திரன், பெருநகர சென்னை மாநகராட்சி கல்விக்குழுத் தலைவர் பாலவாக்கம் விஸ்வநாதன், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அதிகாரிகள், பள்ளி ஆசிரியர்கள் மாணவர்கள், கழக நிர்வாகிகள் முண்ணனியினர் கலந்துகொண்டனர்.



சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி மற்றும் மேற்கு பகுதி கழகம் சார்பில் பாக முகவர்கள் மற்றும் பாகப்பணியாளர்கள் ஆலோசனைக் கூட்டம் தண்டையார்பேட்டை, இளைய தெருவில் உள்ள எஸ்.எஸ் . திருமண மண்டபத்தில் பகுதி கழக செயலாளர்கள் இரா. லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், ஆகியோர் ஏற்பாட்டில் மாவட்ட கழக செயலாளர் தா.இளையஅருணா தலைமையில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ, ஆகியோர் முன்னிலையில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆலோசனைகள் வழங்கினார்.இதில் ஆர்.கே.நகர் தொகுதி பார்வையாளர் நந்தனம் நம்பிராஜன், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, கே.வேதலட்சுமி, கே.பி. சதீஷ்குமார், எம். கோவிந்தராஜ், எம். லோகநாதன், டி.திராவிடசெல்வி, பி.சீனிவாசன், மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கனேசன், என்.எம். கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா.கோதண்டன், மா.நாகராஜ், பா.குமார், சா. தமிழ்ச்செல்வன், பொ.து.ராஜா, கி.தேவன், ஆர்.ஏ. எம்.சசிகுமார், ஜி.ஏழுமலை, எம். ராஜன் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள், பாகமுகவர்கள் மற்றும் பாக பணியாளர் கலந்து கொண்டனர்.

### இந்தியாவிலேயே முதன்முறையாக

# பிரத்யேகமாக முதியோருக்கான சிறப்பு மருத்துவமனை!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் பிரதமர் நரேந்திர மோடி காணொலி மூலம் திறந்து வைத்தார்!

சென்னை,பிப்.26-

சென்னை, கிண்டியில் நேற்று (25.02.2024) தேசிய முதியோர் நல மருத்துவ மையத்லித் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில், பிரதமர் நரேந்திரமோடி காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.

அமைச்சர் மா.சுப்பிர மணியன் செய்தியாளர்களிடம் தெரித்ததாவது:

**மருத்துவமனை சிறப்புகள் மற்றும் வசதிகள்**

இந்தியாவின் வயது முதிர்ந்தோருக்கான மருத்துவமனை இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டு தொடங்கி பல்வேறு நிலைகளைக் கடந்து கட்டிடப்பணிகள் நிறைவுற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடர்ச்சியாக எடுக்கப்பட்ட முயற்சிகளுக்குப்பின் ஒன்றிய அரசின் பிரதமர் அவர்களால் இன்று மக்களின் பயன்பாட்டிற்காக இம்மருத்துவமனை அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. 200 படுக்கைகள் கொண்ட இம்மருத்துவமனை 276 புதிய பணியிடங்கள் உருவாக்கப்பட்டு தற்போது பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது.

தமிழ்நாடு அரசின் சார்பில் 8.64 ஏக்கர் நிலப்பரப்பு ஆர்ஜிதம் செய்யப்பட்டு இப்பணிகள் முடிவுற்று இம்மருத்துவமனை தற்போது பயன்பாட்டிற்கு வந்துள்ளது. இம்மருத்துவமனையின் பல்வேறு வசதிகளுடன் கூடிய மருத்துவ சிகிச்சைகள் வயது முதிர்ந்தவர்களுக்கு அளிக்கப்படவிருக்கிறது. தினசரி இயங்கும் புறநோயாளிகள் பிரிவு தொடங்கப்படவுள்ளது. சிறப்பு சிகிச்சை பிரிவுகள், பிரத்யேக நோய்களான அறிவுத்திறன் குறைபாடு, நிலை தடுமாறி விழுதல், எலும்பு தேய்மானம், சிறுநீர் கட்டுப்படுத்த முடியாமை, நாட்பட்ட வலி முதலியவற்றிற்கான நோய்கள் கண்டறிதல், புனர்வாழ்வு சிகிச்சைகள் ஆகியவை இம்மருத்துவமனை யில் 24 மணிநேரமும் அளிக்கப்படவுள்ளன. சிறப்பு பிரிவுகளான இருதயநோய் மருத்துவம், சிறுநீரகம், மூளை நரம்பியல், வயிறு மற்றும் சிறுகுடல், மன நல மருத்துவம், இயன்முறை மருத்துவம் மற்றும் புனர்வாழ்வு மருத்துவம், அரசின் ஆயுஷ் மூலம் வழங்கப்படும் சேவைகளும் இம்மருத்துவமனையில் கிடைக்க பெற உள்ளன.

பொது அறுவை சிகிச்சை, எலும்பியல் அறுவை சிகிச்சை, கண் காது மூக்கு, தொண்டை அறுவை சிகிச்சைகள், சிறுநீரக அறுவை சிகிச்சைகள் முதலான முக்கிய சேவைகளும் முதியோர்களுக்கு இம்மருத்துவமனையில் கிடைக்க உள்ளது. இங்கே அதிநவீன மருத்துவ தொழில்நுட்ப உபகரணங்களான எக்ஸ்ரே, சிடி ஸ்கேன், அல்ட்ரா சவுண்ட், ஸ்கேன் போன்ற வசதிகளும் இம்மருத்துவமனையில் பொருத்தப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் இரத்த மாதிரிகளும், திசு பரிசோதனைகளும் இம்மருத்துவமனையில் சிறப்பாக செய்யப்பட உள்ளன.

**முதியோர் இளைப்பாறுவதற்கு நூலகம்**

இம்மருத்து வமனை திறந்து வைக்கப்படும்போதே ரூ.1 கோடி மதிப்பிலான Essential Drugs என்று சொல்லக் கூடிய அவசர, அவசிய மருந்துகள் கையிருப்புகள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

அந்தவகையில் இம்மருத்துவமனை தற்போது புதிய வசதிகளுடன் தற்போது பயன்பாட்டிற்கு வந்துள்ளது. 200 படுக்கைகள் மட்டுமல்லாமல் 40 தீவிர சிகிச்சை படுக்கைகள், 20 கட்டணப்படுக்கைகள் என்கின்ற வகையில் கட்டண அறைகளும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த கட்டணப் படுக்கைகள் பொறுத்தவரை ஒவ்வொரு அறையிலும் குளிர்சாதன அறை, தொலைக்காட்சிப் பெட்டி, ஷோபா, மேசை மற்றும் நாற்காலி, பீரோ போன்ற வசதிகளுடன் ஒவ்வொரு அறையும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த அறைகளின் வாடகையாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலைப்பெற்று குறைந்த அளவிலான வாடகையாக ரூ.900 என்கின்ற வகையில் நிர்ணயிக்கப்படுகிறது. அந்தவகையில் 20 அறைகளும் பயன்பாட்டிற்கு வருகிறது. முதியோரைப் பொறுத்தவரை மருத்துவத்திற்கு வருபவர்கள் பார்வை திறன் குறைபாடு, ஞாபக சக்தி போன்ற பல்வேறு சிகிச்சைகளுக்கான வருபவர்கள் 24 மணி நேரமும் படுக்கை அறைகளில் தங்குவது அவசியமற்ற ஒன்று என்பதாலே மாலை நேரங்களில் ஓய்வு எடுப்பதற்கும், இளைப்பாறுவதற்கும் வசதியாக நூலகம் அமைக்கப்பட்டிருக்கிறது. நூலகம் மட்டுமல்லாமல் ஓய்வு நேரத்தை சிறப்பாக பயன்படுத்திக் கொள்ளும்வகையில் கேரம் போர்டு, செஸ் பலகைகள், பல்லாங்குழி போன்ற தமிழர்களின் விளையாட்டுகள் தொடர்பாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது. இன்று சிகிச்சை வந்திருக்கும் முதியோர்களுக்கு அட்மிஷன் அட்டை வழங்கப்பட்டு மருத்துவமனையில் தற்போது அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். ஆக இந்தியாவின் முதல் பிரத்யேக வயது மூத்தவர்களுக்கான மருத்துவமனை இன்று முதல் பயன்பாட்டிற்கு வருகிறது என்பது தமிழ்நாட்டிற்கு கூடுதல் முயற்சி.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர்.தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் காரப்பாக்கம் கணபதி, அரவிந்த் ரமேஷ், பிரபாகர் ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி மதிப்பிற்குரிய துணை மேயர் மகேஷ்குமார், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, உணவு பாதுகாப்புத்துறை ஆணையர் ஆர்.லால்வேனா, தேசிய சுகாதார குழும இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதிஷ், தேசிய சுகாதார ஆணையம் - இயக்குநர் திருமதி.லதா, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. சங்குமணி, பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி. செல்வவிநாயகம், சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத்தலைவர்கள் துரை ராஜ், கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் கலந்து கொண்டனர்.

### ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன் தலைமையில்

# உத்திரமேரூரில் முதல்வர் பிறந்த நாள் - சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## க.சுந்தர் எம்.எல்.ஏ. - திண்டுக்கல் ஐ.லியோனி - க.செல்வம் சிறப்புரை!

காஞ்சிபுரம், பிப். 26 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியபேரூர் தி.மு.க. சார்பில் கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 71 வது பிறந்தநாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் நாளை (27-02- 2024 செவ்வாய்க்கிழமை) மாலை 5.00 மணி, கே.எம்.ஆர்.பேருந்து நிலையம், உத்திரமேரூரில், ஒன்றிய கழக செயலாளர், ஒன்றியக்குழு உறுப்பினர் கெ.ஞானசேகரன் தலைமையில் நடைபெறுகிறது. இதில் பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளல் வரவேற்கிறார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., தமிழ்நாடு பாடநூல் வாரியத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, மாவட்ட துணைச் செயலாளர் க. செல்வம் எம்.பி., தலைமைக் கழக பேச்சாளர் விசார் க.தமிழ்அரசன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் இரா.நாகன், சாலவாக்கம் ஒன்றியச் செயலாளர் டி.குமார், பொ.சசிகுமார், ஒன்றியக் குழுத் தலைவர் ஹேமலதா ஞானசேகரன், துணைத் தலைவர் வசந்தி குமார்,

இளமதி கோவிந்தராஜ்இ பத்மாபாபு , Dr.வி.திவாகர், கோ.காளிதாஸ், ஏ.கே. ரமேஷ்பாபு, டி.கே.கோபாலகிருஷ்ணன், கே.தயாளன், தே.வீராசாமி , ஆர். மணி, பி.எம்.தாமஸ், ஏ. மூர்த்தி, கீ.கண்ணாயிரம், லோபல்யா, து.சுந்தர், மு.தாமோதரன், தா.சுப்பராயன், எஸ்.ருத்தர கோட்டி, சு.சுருணாசுந்தர் ரா ஜன், கெங்கன், தே.பாபு, குமாரதேவ், இரா.கார்த்திகேயன், க.மாயகிருஷ்ணன், துரமேஷ், ஏவீரமணி, ஆஜெயகாந்தா ,ப.மகேந்திரன், கஅப்துல்ஹக்கிம், வெகோவிந்தராஜ், வ.குணசேகரன், மா.கருணாநிதி, ந.ராஜேந்திரன், ஏ.செல்லமுத்து, வி. ராஜபாண்டி, ஆநீலகண்டன், கி.மனோகரன்,

ஒன்றிய குழு உறுப்பினர்கள் கலைச்செல்வி உமாபதி, பானுமதி சேகர், வெ.திருமலை, ஆ.அண்ணாதுரை, வீரம்மாள் மாயகிருஷ்ணன், நா.அறிவழகன், க.வெங்கடேசன், கு.நரசிம்மபாரதி, தமிழரசி பாபு, கி. தனசேகரன், சிங்காரி சிவா. கவிதா சசிகுமார், மைவிழிச் செல்வி மனோகரன், நா.உதயசூரியன், பெ.பரணி, ரத்தினா பாஸ்கர், ஒன்றிய பேரூர் அணிகளின் அமைப்பாளர்கள் கோ.தவனசிரி, ஆ. தனஞ்செழியன், பொ. பெருமான். மூ.பத்மநாபன், கா.வெங்கடேசன், வே.ஆறுமுகம், ஜி.பி.அருள்ரால், எஸ்.ஞானமணி, பி.தட்சிணாமூர்த்தி, கி.கன்னி யப்பன், சு.வீரப்பன், வே. பாலாஜி, அ.மலர்விழி, இரா.பன்னீர்செல்வம். கி. தனசேகரன். வெ.கிருஷ்ணமூர்த்தி, க.மா.எல்லப்பன், வி. வி.பாபு, ந.பாலசுப்பிரமணியன், ச ச.மரகதம், தம். இரா.பிரசன்னா, க.கன்னியப்பன்., ரா.அரசகுமார் உள்ளிட்ட கிளைக் கழகச் செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள், முன்னனணியினர் கலந்து கொள்கின்றனர்

வெ.கோவிந்தராஜ் நன்றி கூறுகிறார்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பொழிச்சலூர் பகுதிகளில் உள்ள சாலைகள் குண்டும் குழியுமாகவும், முழுமையாக சேதம் அடைந்த நிலையிலும் இருப்பதால் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் தினமும் பெரும் அவதிக்கு உள்ளாகி வருகின்றனர் என தொடர்ந்து புகார் எழுந்தது. அதனை நிவர்த்தி செய்யும் வகையில் 3.02 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 41 சிமெண்ட் சாலைகள் அமைக்கும் பணியை பல்லாவரம் இ. கருணாநிதி எம்.எல்.ஏ அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்

### திருவள்ளூர் மேற்கு மாவட்டம் முழுவதும் பிப்ரவரி 26-ஆம் தேதி முதல்

# ‘இல்லந்தோறும் தலைவர் ஸ்டாலினின் குரல்’ துண்டுப் பிரசுரம் விநியோகம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ வேண்டுகோள்!

திருவள்ளூர், பிப்.26-

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் ஒன்றிய/நகர/பேரூர் கழக பகுதிகளில் இல்லந்தோறும் தலைவர் ஸ்டாலிலின் குரல் என்ற தலைப்பில் திராவிட மாடல் முதல்வர் கழக தலைவர் அவர்களின் ஆட்சியின் சாதனைகளை தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட துண்டு பிரசுரங்களை இன்று (26 -ஆம் தேதி) முதல் வீடுவீடாக சென்று வழங்கி திண்ணை பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டுமென மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தமது அறிக்கையில் வாயிலாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு;

முதல்வர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளையும் தமிழ்நாடு அரசின் 2024-2025-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் சிறப்பினை இல்லந்தோறும் கொண்டு சேர்க்கவும் ஒன்றிய மோடி அரசால் தமிழ்நாட்டிற்கும் தமிழர்களுக்கும் தொடர்ந்து கொடுத்து வரும் வேதனைகளையும் ஒவ்வொருவருக்கும் எடுத்துரைக்கும் வகையில் பிப்ரவரி 26-ஆம் தேதி முதல் அனைத்து ஒன்றிய/நகர/பேரூர் கழகங்களில் தலைமை கழகத்தால் வழங்கப்பட்ட துண்டு பிரசுரங்களை விநியோகித்து வீடு வீடாக திண்ணை பிரச்சாரத்தை BLA2, BLCக்கள் மகளிர் அணி, கிளை கழக நிர்வாகிகள், அணிகளை சார்ந்தோர் என அனைவரும் ஒன்றிய/நகர/பேரூர் கழக செயலாளர்கள் தலைமையில் தொகுதி பார்வையாளர்கள், மாநில/மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொள்ள இப்பணியில் தீவிரமாக நாடாளுமன்ற தேர்தலையொட்டி இந்தியா கூட்டணி வெற்றிக்காக தொடங்கிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். ‘இல்லந்தோறும் தலைவர் ஸ்டாலின் குரல்’ திண்ணை பிரச்சாரம் மேற்கொள்ளும் போது மகளிர் உரிமைத் தொகை திட்டம், விடியல் பயணம், புதுமை பெண் திட்டம், காலை சிற்றுண்டி திட்டம், மாணவ / மாணவியருக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் கல்வி திட்டம், இல்லந்தோறும் கல்வி, மக்களை தேடி மருத்துவம், தொழில் முதலீடுகள் மற்றும் இன்னும் ஆட்சியின் பல்வேறு சாதனைகளை விளக்கியும் ஒன்றிய பா.ஜ.க அரசின் மோடி தலைமையில் தமிழ்நாட்டிற்கு இழைக்கப்பட்ட அநீதிகளை விளக்கியும் கிராமம் கிராமமாக கிளை கழகங்கள் மற்றும் வார்டுகள் தோறும் கழக தோழர்கள் திண்ணை பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்

# தியாகராயர் நகர் கிழக்கு - மேற்கு பகுதி செயற்குழு கூட்டம்!

## ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கே.ஏழுமலை எம்.சி. அறிவிப்பு!

சென்னை, பிப்.26-

தியாகராயர் நகர் சென்னை தென்மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட தியாகராயர் நகர் சட்டமன்ற தொகுதியின் “இல்லம்தோறும் ஸ்டாலினின் குரல்” தேர்தல் பரப்புரை நிகழ்ச்சி தொடர்பாக இன்று (26.02. 2024 - திங்கட்கிழமை) காலை 10 மணி அளவில் சர் பிட்டி தியாகராயர் கலையரங்கத்தில் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம். எல்.ஏ. தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், பாக முகவர்கள் (BLA2), பாக ஒருங்கிணைப்பாளர்கள், கிளை கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. சிறப்புரையாற்று கிறார்.

தி.நகர் தொகுதி பார்வையாளர் ப.அப்துல்மாலிக் முன்னிலை வகிக்கிறார்.

இவ்வாறு தியாகராயர் நகர் கிழக்கு பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. தியாகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் தெரிவித்துள்ளனர்.



சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர் பாபு ஆலோசனையின்படி, நேற்று 25.2.2024 எழும்பூர் தெற்கு பகுதிக்குட்பட்ட பாக நிலை முகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் கோ. ஏகப்பன் தலைமை வகித்தார். பகுதி செயலாளர் வி.சுதாகர், தொகுதி மேற்பார்வையாளர் ஓ.ஏ.நாகலிங்கம் முன்னிலை வகித்து ஆலோசனைகளை வழங்கினார். இதில் கே.எஸ்.எம். நாதன், நிர்மலா தேவி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., எல் சுந்தர்ராஜன் எம்.சி., பகுதி நிர்வாகிகள் எஸ். ரசூல், எஸ். ஜெகதீசன், வட்ட கழக செயலாளர்கள், வி. விஜய குமார், ஆர். பாபு (ஏ) சந்திரசேகரன் எஸ். டால்ஃபின் ஹரி, இ. மொய்தீன் வான்மதி கதிரவன், வி.வெற்றிவேலன் பாக நிலை முகவர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், வட்ட நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

### க.பரமத்தி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர்

# கே.கருணாநிதி மகள் பி.இலக்கியா மறைவு!

## முதல்வர்-தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப்.26

கரூர் மாவட்டம் க.பரமத்தி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் கே.கருணாநிதியின் மகள் திருமதி. பி. இலக்கியாவின் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

கரூர் மாவட்டம் க.பரமத்தி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் கே.கருணாநிதியின் மகள் திருமதி பி.இலக்கியா மறைந்த செய்தி அறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.


தனது அன்பு மகளை இழந்து தவிக்கும் ஒன்றியக் கழகச் செயலாளர் கே.கருணாநிதிக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## குளித்தலை இளமுருகு

**பிப்ரவரி 26 (2000)**



திராவிட இயக்கத்தின் வளர்ச்சியிலே அடிநாள் தொட்டு அக்கறையோடும் ஆர்வத்தோடும் ஈடுபாடு கொண்டு உழைத்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் ஆரம்பகாலத் தோழர்களில் ஒருவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1957ல் குளித்தலை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டபோது வெற்றிக்கு அடித்தளமாக இருந்து உழைத்தவர்களில் இவரும் ஒருவர்.

காதல் கலப்புமணம் செய்தவர். ஆண்பெண் சம உரிமையை நிலைநாட்டிட வேண்டுமென்பதற்காகவே தன் பெயரோடு தன் மனைவியின் பெயரையும் இணைத்துக் கொண்டு “இளமுருகு பொற்செல்வி” என்றே தம்மை அழைத்துக் கொண்டவர்.

1991ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் இவருக்கு ‘அண்ணா’ விருது வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

“கழகத் தொண்டர்கள் உள்ளத்தில் வரலாற்றுச் சிறப்போடு வாழ்பவர்” என தனது இரங்கல் செய்தியில் தலைவர் கலைஞர் தெரிவித்துள்ளது சிறப்பாகும்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**